பொருளடக்கம்

❄

குகைவாசிகள் கொள்கைப் பாதை 7
குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14
முன்னுரை 21
1 இறைத்தூதர் ஆதம் 23
2 முதல் ரஸூல் நூஹ் 34
3 இறைத்தூதர் ஹூது 44
4 இறைத்தூதர் ஸாலிஹ் 50
5 அல்லாஹ்வின் நண்பர் இப்றாஹீம் 55
6 இறைத்தூதர் லூத் 75
7 இறைத்தூதர் ஷுஐபு 80
8 இறைத்தூதர் யூசுஃப் 85
9 இறைத்தூதர் அய்யூபு 100
10 இறைத்தூதர் யூனுஸ் 104
11 அல்லாஹ்விடம் பேசிய மூஸா 107
12 இறைத்தூதர் தாவூது 135
13 இறைத்தூதர் சுலைமான் 140
14 இறைத்தூதர்கள் ஸகரிய்யா மற்றும் யஹ்யா 145
15 இறைத்தூதர் ஈஸா 149
16 இறுதித்தூதர் முஹம்மது 160
பின்னிணைப்பு
நபிமார்கள் – ரஸூல்மார்கள் வேறுபாடும் விளக்கமும் 187
அறிமுகம் 189
1 நபிக்கும் ரஸூலுக்கும் தகுதியால் வேறுபாடு உண்டு 191
2 மறுப்போரின் வாதங்களும் எதிர் ஆதாரங்களும் 194

3 கூடுதல் ஆதாரங்கள் 206
4 வேறுபாட்டை விளக்கும் ஆதாரங்கள் 210
5 கேள்வி பதில்கள் 216

1

இறைத்தூதர் ஆதம் ﷺ

❄

وَإِذْ قَالَ رَبُّكَ لِلْمَلَائِكَةِ إِنِّي جَاعِلٌ فِي الْأَرْضِ خَلِيفَةً قَالُوا أَتَجْعَلُ فِيهَا مَنْ يُفْسِدُ فِيهَا وَيَسْفِكُ الدِّمَاءَ وَنَحْنُ نُسَبِّحُ بِحَمْدِكَ وَنُقَدِّسُ لَكَ قَالَ إِنِّي أَعْلَمُ مَا لَا تَعْلَمُونَ وَعَلَّمَ آدَمَ الْأَسْمَاءَ كُلَّهَا ثُمَّ عَرَضَهُمْ عَلَى الْمَلَائِكَةِ فَقَالَ أَنْبِئُونِي بِأَسْمَاءِ هَؤُلَاءِ إِنْ كُنْتُمْ صَادِقِينَ قَالُوا سُبْحَانَكَ لَا عِلْمَ لَنَا إِلَّا مَا عَلَّمْتَنَا إِنَّكَ أَنْتَ الْعَلِيمُ الْحَكِيمُ قَالَ يَا آدَمُ أَنْبِئْهُمْ بِأَسْمَائِهِمْ فَلَمَّا أَنْبَأَهُمْ بِأَسْمَائِهِمْ قَالَ أَلَمْ أَقُلْ لَكُمْ إِنِّي أَعْلَمُ غَيْبَ السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَأَعْلَمُ مَا تُبْدُونَ وَمَا كُنْتُمْ تَكْتُمُونَ وَإِذْ قُلْنَا لِلْمَلَائِكَةِ اسْجُدُوا لِآدَمَ فَسَجَدُوا إِلَّا إِبْلِيسَ أَبَى وَاسْتَكْبَرَ وَكَانَ مِنَ الْكَافِرِينَ وَقُلْنَا يَا آدَمُ اسْكُنْ أَنْتَ وَزَوْجُكَ الْجَنَّةَ وَكُلَا مِنْهَا رَغَدًا حَيْثُ شِئْتُمَا وَلَا تَقْرَبَا هَذِهِ الشَّجَرَةَ فَتَكُونَا مِنَ الظَّالِمِينَ فَأَزَلَّهُمَا الشَّيْطَانُ عَنْهَا فَأَخْرَجَهُمَا مِمَّا كَانَا فِيهِ وَقُلْنَا اهْبِطُوا بَعْضُكُمْ لِبَعْضٍ عَدُوٌّ وَلَكُمْ فِي الْأَرْضِ مُسْتَقَرٌّ وَمَتَاعٌ إِلَى حِينٍ فَتَلَقَّى آدَمُ مِنْ رَبِّهِ كَلِمَاتٍ فَتَابَ عَلَيْهِ إِنَّهُ هُوَ التَّوَّابُ الرَّحِيمُ قُلْنَا اهْبِطُوا مِنْهَا جَمِيعًا فَإِمَّا يَأْتِيَنَّكُمْ مِنِّي هُدًى فَمَنْ تَبِعَ هُدَايَ فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ

அல்லாஹ் கூறுகிறான்: உம் இறைவன் வானவர்களிடம் 'நான் பூமியில் ஒரு வழித்தோன்றலை ஏற்படுத்தப் போகின்றேன்' என்று கூறியபோது, அவர்கள் 'பூமியில் குழப்பம் விளைவித்து இரத்தம் சிந்தக்கூடிய மக்களையா நீ ஏற்படுத்தப் போகின்றாய்? நாங்களோ உன்னைப் புகழ்ந்து உன் தூய்மையைப் பறை சாற்றிக்கொண்டிருக்கிறோம்' என்று கூறினார்கள். அதற்கு அவன் 'நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நான் அறிவேன்' என்று கூறினான்.

அவன் ஆதமுக்கு ஒவ்வொரு பொருள்களின் பெயர்களையும் (அவற்றின் தன்மைகளையும் பயன்பாடுகளையும்) பற்றிக் கற்றுக்கொடுத்தான். பின்னர் அந்தப் பொருள்களை வானவர்கள்

لَمَّا صَوَّرَ اللهُ آدَمَ فِي الْجَنَّةِ تَرَكَهُ مَا شَاءَ اللهُ أَنْ يَتْرُكَهُ، فَجَعَلَ إِبْلِيسُ يُطِيفُ بِهِ، يَنْظُرُ مَا هُوَ، فَلَمَّا رَآهُ أَجْوَفَ عَرَفَ أَنَّهُ خُلِقَ خَلْقًا لَا يَتَمَالَكُ

அல்லாஹ் ஆதமுக்கு வடிவம் கொடுத்தபோது சொர்க்கத்தில் தான் நாடியவரை விட்டுவிட்டான். இப்லீஸ் அவரைச் சுற்றி வந்து அவரிடம் என்ன இருக்கிறது என்று பார்க்கலானான். வயிறு உள்ளதாக அதைக் கண்டபோது 'தன்னைத் தானே கட்டுப்படுத்த முடியாத படைப்பாக அவர் படைக்கப்பட்டுள்ளார்' என்பதை அறிந்துகொண்டான். (அறிவிப்பு: அனஸ் ﷺ, முஸ்லிம் 2611)

வானவர்களின் கேள்விக்குக் காரணம் என்ன?

அல்லாஹ் வானவர்களிடம் 'நான் பூமியில் ஒரு வழித்தோன்றலை உருவாக்கப்போகிறேன்' என்று கூறியபோது அவர் படைக்கப்பட்ட நோக்கத்தை அறிந்துகொள்ளும் பொருட்டுதான் அவர்கள் அவ்வாறு கேட்டார்கள். ஆட்சேபணை செய்யும் நோக்கில் அல்ல. அல்லது மனிதர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறுசெய்வார்களோ என்ற அச்சத்தில்தான் கேட்டிருப்பார்கள். உடனே அவர்கள் தாங்கள் கூறிய நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறார்கள்: 'நாங்களோ உன்னைப் புகழ்ந்து உன் தூய்மையைப் பறைசாற்றிக்கொண்டிருக்கிறோம்.'

ஆதமின் மேன்மையும் வானவர்களின் பணிவும்

பின்னர் அல்லாஹ் ஆதமுக்கு அனைத்துப் பொருள்களின் பெயர் களையும் கற்றுக்கொடுத்தான். மனிதன் அவற்றை அறிந்து கொண்டான். அல்லாஹ் மனிதனுக்கு மலைகள், ஆறுகள் மற்றும் அனைத்தின் பெயர்களையும் கற்றுக்கொடுத்தான். அல்லாஹ் ஆதமுக்குக் கற்றுக்கொடுத்த பெயர்களைக் கூறுமாறு வானவர்களி டம் அவன் கேட்டபோது 'நீ தூயவன். நீ எங்களுக்கு எதைக் கற்றுக்கொடுத்தாயோ அதை மட்டுமே நாங்கள் அறிவோம். நிச்சயமாக நீ நன்கறிந்தவனாகவும் ஞானமிக்கவனாகவும் இருக் கின்றாய்' என்று அவர்கள் கூறினார்கள். பின்னர் அல்லாஹ் ஆதமுக்கு அவற்றின் பெயர்களை அவர்களுக்கு அறிவிக்குமாறு கட்டளையிட்டான். அவரும் அவர்களுக்கு அறிவித்தார்.

இப்லீஸ் இழிவடைந்த கட்டம்

அல்லாஹ் அவருக்குள் தான் படைத்த ஆன்மாவை ஊதியவுடன் அவருக்குச் சிரம்பணியுமாறு வானவர்களுக்குக் கட்டளை பிறப்

4

இறைத்தூதர் ஸாலிஹ் ﷺ

❄

ஸாலிஹ் ﷺ அவர்களின் தந்தை பெயர் அப்து என்பதாகும். இவர் ஸமூது என்பவரின் சந்ததியைச் சேர்ந்தவர். எனவே, இவருடைய சமூகமும் ஸமூது என்றே அழைக்கப்படுகிறது. இந்தச் சமூகத்தினர் ஹிஜாஸிற்கும் தபூக்கிற்கும் இடையிலுள்ள ஹிஜ்ர் என்ற பகுதியில் வசித்தார்கள்.

ஆது சமூகத்திற்குப் பின் ஸமூது

ஆது சமூகம் அழிக்கப்பட்ட பிறகு ஸமூது சமூகம் வந்தது. எனவே, அவர்களது தூதர் ஸாலிஹ் அவர்களிடம் கூறினார்:

وَاذْكُرُوا إِذْ جَعَلَكُمْ خُلَفَاءَ مِنْ بَعْدِ عَادٍ وَبَوَّأَكُمْ فِي الْأَرْضِ

ஆது சமூகத்திற்குப் பின் இறைவன் உங்களை சந்ததிகளாக்கியதை யும் பூமியில் உங்களை வசிக்கச் செய்ததையும் நினைவுகூருங்கள். *(குர்ஆன் 7:74)*

அல்லாஹ் ஸாலிஹை ஸமூது சமூகத்திடம் அனுப்பினான். அவர் அவர்களை அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்குவதின் பக் கம், அவனைத் தவிர மற்றவற்றை விட்டொழிப்பதின் பக்கம் அழைத்தார்:

يَا قَوْمِ اعْبُدُوا اللَّهَ مَا لَكُمْ مِنْ إِلَهٍ غَيْرُهُ

என் சமூகமே, அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனைத் தவிர உங்களுக்கு வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லை. *(குர்ஆன் 7:73)*

ஆனால் அவர்கள் அவருடைய அழைப்பை நிராகரித்து அவரைப் பரிகாசம் செய்யலானார்கள்.

7

இறைத்தூதர் ஷுஐபு ﷺ

❄

மத்யன்வாசிகள் அறபுகளாக இருந்தார்கள். ஷாம் தேசத்தின் எல்லைப்பகுதியில், ஹிஜாஸிற்கு அருகிலுள்ள மஆன் என்ற நிலப்பகுதியே மத்யன் என்று வழங்கப்படுகிறது. அங்குதான் அவர்கள் வசித்து வந்தார்கள். அவர்கள்

- வழிப்பறிக் கொள்ளையர்களாக,
- பயணிகளைப் பயமுறுத்தக்கூடியவர்களாக,
- அய்கா என்னும் தோப்பை வணங்கும் நிராகரிப்பாளர்களாக,
- அளவையிலும் நிலுவையிலும் மோசடி செய்பவர்களாக இருந்தார்கள்.

அல்லாஹ் அவர்களிலிருந்தே ஒரு தூதரை அவர்களிடம் அனுப்பினான். அவர்தாம் ஷுஐபு ﷺ ஆவார். அவர் அவர்களை ஒரே இறைவனை வணங்குவதின் பக்கம், தீய காரியங்களை விட்டு விடுவதின் பக்கம் அழைத்தார். அல்லாஹ் கூறுகிறான்:

وَإِلَىٰ مَدْيَنَ أَخَاهُمْ شُعَيْبًا قَالَ يَا قَوْمِ اعْبُدُوا اللَّهَ مَا لَكُمْ مِنْ إِلَٰهٍ غَيْرُهُ قَدْ جَاءَتْكُمْ بَيِّنَةٌ مِنْ رَبِّكُمْ فَأَوْفُوا الْكَيْلَ وَالْمِيزَانَ وَلَا تَبْخَسُوا النَّاسَ أَشْيَاءَهُمْ وَلَا تُفْسِدُوا فِي الْأَرْضِ بَعْدَ إِصْلَاحِهَا ذَٰلِكُمْ خَيْرٌ لَكُمْ إِنْ كُنْتُمْ مُؤْمِنِينَ وَلَا تَقْعُدُوا بِكُلِّ صِرَاطٍ تُوعِدُونَ وَتَصُدُّونَ عَنْ سَبِيلِ اللَّهِ مَنْ آمَنَ بِهِ وَتَبْغُونَهَا عِوَجًا وَاذْكُرُوا إِذْ كُنْتُمْ قَلِيلًا فَكَثَّرَكُمْ وَانْظُرُوا كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُفْسِدِينَ

மத்யனை நோக்கி நாம் அவர்களது சகோதரர் ஷுஐபை அனுப்பினோம். அவர் கூறினார்:

என் சமூகமே, அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனைத் தவிர உங்களுக்கு வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லை. உங்கள் இறைவனிடமிருந்து தெளிவான ஆதாரம் உங்களிடம்

யூசுஃப் அதில் தொங்கிக் கொண்டார். யூசுஃபைக் கண்ட அவர் மகிழ்ச்சியடைந்து, மெதுவாக அவரை மேலே தூக்கி வெளியே கொண்டுவந்தார். இதனை அறிந்த யூசுஃபின் சகோதரர்கள் அவர்களிடம் சென்று 'இவன் எங்களின் அடிமை. எங்களை விட்டும் ஓடிவிட்டான்' என்று கூறி அற்ப விலைக்கு அவர்களிடமே விற்றுவிட்டார்கள்.

எகிப்து அமைச்சரிடம் யூசுஃப்

எகிப்தில் யூசுஃப் அந்நாட்டு அமைச்சரிடம் விற்கப்பட்டார். அவர் அந்த நாட்டினுடைய கருவூலங்களின் அமைச்சராக இருந்தார்.

وَقَالَ الَّذِي اشْتَرَاهُ مِنْ مِصْرَ لِامْرَأَتِهِ أَكْرِمِي مَثْوَاهُ عَسَى أَنْ يَنْفَعَنَا أَوْ نَتَّخِذَهُ وَلَدًا وَكَذَلِكَ مَكَّنَّا لِيُوسُفَ فِي الْأَرْضِ وَلِنُعَلِّمَهُ مِنْ تَأْوِيلِ الْأَحَادِيثِ وَاللَّهُ غَالِبٌ عَلَى أَمْرِهِ وَلَكِنَّ أَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُونَ

எகிப்தில் அவரை வாங்கிய அமைச்சர் தம் மனைவியிடம் கூறினார்: 'இவரை நல்ல முறையில் கவனித்துக்கொள். இவர் நமக்குப் பயனுள்ளவராக இருக்கலாம் அல்லது இவரை நாம் நம் மகனாக ஆக்கிக்கொள்ளலாம்.' அவருக்குப் பல விசயங்களின் உண்மை நிலையைக் கற்றுக்கொடுப்பதற்காக இவ்வாறு நாம் யூசுஃபுக்கு அந்நாட்டில் இடமளித்தோம். அல்லாஹ் தன் காரியத்தில் மேலோங்கியவனாக இருக்கின்றான். ஆயினும் மக்களில் பெரும் பாலோர் அறிந்துகொள்வதில்லை. *(குர்ஆன் 12:21)*

இவ்வாறுதான் அல்லாஹ் யூசுஃபுக்கு அந்நாட்டில் இடமளித்தான்.

எஜமானியின் தகாத காரியம்

யூசுஃப் வளர்ந்து வாலிபரானதும் மிகவும் அழகானவராக இருந்தார். அல்லாஹ் ஆதமுடைய மக்களுக்கு வழங்கப்பட்ட மொத்த அழகில் பாதி அழகை யூசுஃபுக்கு வழங்கியிருந்தான். அமைச்சரின் மனைவி அவர்மீது ஆசை கொண்டாள். அவருக்காகத் தன்னை அலங்கரித்து தன் இடத்திற்கு அவரை அழைத்தாள். கதவுகளைப் பூட்டிவிட்டு தன் இச்சைக்கு இணங்குமாறு அழைத்தாள். ஆனால், யூசுஃப் தமது இறைவனுக்கு அஞ்சினார். தம்மைக் கண்ணியப்படுத்தி நல்ல முறையில் வளர்த்த தம் எஜமானனுக்குத் துரோகம் செய்வதை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடினார்.

கப்பலில் யூனுஸ்

யூனுஸோ தம் சமூகத்தின்மீது கோபம்கொண்டு வெளியேறி ஒரு கப்பலில் ஏறிவிட்டார். கப்பல் கடலில் சென்றுகொண்டிருக்கும் போது அளவுக்கு மீறிய சுமையினால் ஆட்டம் காண ஆரம்பித்தது. மக்கள் மூழ்குவதற்கு நெருங்கிவிட்டார்கள். எனவே, சீட்டு குலுக்கிப் போட்டு சிலரைத் தள்ளிவிட வேண்டும் என முடிவுசெய்து கொண்டார்கள்.

சீட்டு குலுக்கிப் போட்டதில் யூனுஸின் பெயரே வந்தது. இரண்டாவது முறை, மூன்றாவது முறை என நான்காவது முறையும் சீட்டுக் குலுக்கிப் போடப்பட்டது. அத்தனையிலும் யூனுஸின் பெயரே வந்தது. எனவே, அவரே கடலில் விழுந்துவிட்டார். அவர் கடலில் விழுந்தபோது அல்லாஹ் ஒரு மீனுக்கு, அவரை விழுங்கிவிடும்படியும் அவருடைய எலும்பையோ சதையையோ தின்றுவிடக்கூடாது என்றும் அறிவித்தான். அல்லாஹ் கூறுகிறான்:

وَإِنَّ يُونُسَ لَمِنَ الْمُرْسَلِينَ إِذْ أَبَقَ إِلَى الْفُلْكِ الْمَشْحُونِ فَسَاهَمَ فَكَانَ مِنَ الْمُدْحَضِينَ
فَالْتَقَمَهُ الْحُوتُ وَهُوَ مُلِيمٌ

நிச்சயமாக யூனுஸும் தூதர்களில் உள்ளவராவார். அவர் தப்பி ஓடி அளவுக்கு அதிகமாக நிரம்பிய கப்பலில் ஏறிக்கொண்டார். சீட்டுக் குலுக்கியபோது அவர் தோல்வியுற்றார். பிறகு பெரிய மீன் ஒன்று அவரை விழுங்கிவிட்டது. அவர் தம்மையே நிந்தித்துக் கொண்டிருந்தார். (குர்ஆன் 37:139-142)

மீனின் வயிற்றில் யூனுஸ்

யூனுஸ் அந்த மீனின் வயிற்றிலே ஒரு குறிப்பிட்ட காலம் வரை தங்கியிருந்தார். அல்லாஹ்வே அதன் காலத்தை நன்கறிவான்.

لَا إِلَهَ إِلَّا أَنْتَ سُبْحَانَكَ إِنِّي كُنْتُ مِنَ الظَّالِمِينَ

‘அல்லாஹ்வே, உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லை. நீ பரிசுத்தமானவன். நிச்சயமாக நான் அநியாயக்காரர்களில் ஒருவனாகிவிட்டேன்’ (குர்ஆன் 21:87)

என்பதுதான் அங்கு அவருடைய துதியாக, பிரார்த்தனையாக இருந்தது. அல்லாஹ் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டான்:

فَلَوْلَا أَنَّهُ كَانَ مِنَ الْمُسَبِّحِينَ لَلَبِثَ فِي بَطْنِهِ إِلَى يَوْمِ يُبْعَثُونَ

12

இறைத்தூதர் தாவூது ﷺ

❄

தாவூது இப்னு ஈஷா இப்னு...இஸ்ஹாக் இப்னு இப்றாஹீம் ﷺ ஆவார். வஹப் இப்னு முனப்பஹ் ﷺ கூறுகிறார்: 'தாவூது ﷺ அவர் கள் குட்டையானவராக, நீலநிற விழிகளை உடையவராக, குறை வான முடியுடையவராக, தூய்மையான உள்ளம் கொண்டவராக இருந்தார்.'

ஜாலூத்தைக் கொன்ற பிறகு அல்லாஹ் தாவூதுக்கு ஆட்சி யதிகாரத்தை வழங்கினான். இஸ்ராயீலின் மக்கள் அவருக்கு மிகவும் கண்ணியமளித்து அவரை அதிகம் நேசித்தார்கள். அவரை தங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் அரசராக ஆக்கினார்கள். அல்லாஹ் அவருக்கு அரசாட்சியையும் தூதுத்துவத்தையும் உலகம் மற்றும் மறுமையின் நன்மைகளையும் சேர்த்து வழங்கினான்.

தாவூது பெற்ற அருட்கொடைகள்

وَقَتَلَ دَاوُودُ جَالُوتَ وَآتَاهُ اللَّهُ الْمُلْكَ وَالْحِكْمَةَ وَعَلَّمَهُ مِمَّا يَشَاءُ

அல்லாஹ்வின் தூதர் தாவூது ஜாலூத்தைக் கொன்றார். அல்லாஹ் அவருக்கு ஆட்சியதிகாரத்தையும் தூதுத்துவத்தையும் வழங்கி னான். தான் நாடிய பல்வேறு கலைகளை அவருக்குக் கற்றுக் கொடுத்தான். (குர்ஆன் 2:251)

அவருக்கு ஸபூர் எனும் வேதத்தை வழங்கினான். அழகிய, இனிமையான குரல்வளத்தை அல்லாஹ் அவருக்கு வழங்கியிருந் தான். மலைகளும் பறவைகளும் அவருடன் சேர்ந்து துதிபாடின. அல்லாஹ் அவருக்கு நேர்வழி காட்டினான். எதிரிகளை எதிர்ப்ப தற்குப் போர்க்கவசங்கள் செய்யும் கலையையும் அவன் அவருக்குக் கற்றுக்கொடுத்தான். அல்லாஹ் கூறுகிறான்:

وَلَقَدْ آتَيْنَا دَاوُودَ مِنَّا فَضْلًا يَا جِبَالُ أَوِّبِي مَعَهُ وَالطَّيْرَ وَأَلَنَّا لَهُ الْحَدِيدَ

15

இறைத்தூதர் ஈஸா ﷺ

❄

மர்யமின் தாய் கர்ப்பம் தரிக்காதவராக இருந்தார். ஒரு நாள் அவர் ஒரு பறவை தன் குஞ்சுக்கு இரை புகட்டிக்கொண்டிருப்பதைக் கண்டார். எனவே, அவரும் குழந்தையின்மீது ஆசை கொண்டார். தனக்குக் குழந்தை பிறந்தால் அக்குழந்தையை பைத்துல் முகத்தஸின் பணிவிடைக்காக அளித்துவிடுவதாக அல்லாஹ்விடம் நேர்ச்சை செய்துகொண்டார். அல்லாஹ்வும் அவருக்குப் பதிலளித்தான், ஆனால் பெண் குழந்தையைக் கொடுத்தான்.

إِذْ قَالَتِ امْرَأَتُ عِمْرَانَ رَبِّ إِنِّي نَذَرْتُ لَكَ مَا فِي بَطْنِي مُحَرَّرًا فَتَقَبَّلْ مِنِّي إِنَّكَ أَنْتَ السَّمِيعُ الْعَلِيمُ فَلَمَّا وَضَعَتْهَا قَالَتْ رَبِّ إِنِّي وَضَعْتُهَا أُنْثَى وَاللَّهُ أَعْلَمُ بِمَا وَضَعَتْ وَلَيْسَ الذَّكَرُ كَالْأُنْثَى وَإِنِّي سَمَّيْتُهَا مَرْيَمَ وَإِنِّي أُعِيذُهَا بِكَ وَذُرِّيَّتَهَا مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ فَتَقَبَّلَهَا رَبُّهَا بِقَبُولٍ حَسَنٍ وَأَنْبَتَهَا نَبَاتًا حَسَنًا وَكَفَّلَهَا زَكَرِيَّا

இம்றானின் மனைவி ‘என் இறைவா, என் வயிற்றில் உள்ளதை உனக்காக அர்ப்பணிக்க நான் நேர்ச்சை செய்துகொண்டேன். எனவே, நீ என்னிடமிருந்து ஏற்றுக்கொள்வாயாக! நிச்சயமாக நீ செவியேற்பவனாகவும் அறிபவனாகவும் இருக்கின்றாய்’ என்று கூறியதை எண்ணிப் பாருங்கள். அவர் பெற்றெடுத்தபோது ‘என் இறைவா, நான் பெண் குழந்தையைப் பெற்றெடுத்துவிட்டேனே’ என்றார். அப்பெண்மணி எதைப் பெற்றெடுத்தார் என்பதை அல்லாஹ் நன்கறிவான். ஆண் குழந்தை பெண் குழந்தையைப் போலல்ல. நான் அதற்கு மர்யம் எனப் பெயரிட்டுள்ளேன். நான் அக்குழந்தைக்கும் அதனுடைய வழித்தோன்றல்களுக்கும் விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். அவளது நேர்ச்சையை அல்லாஹ் அழகிய முறையில் ஏற்றுக்கொண்டான். அந்தக் குழந்தையை நல்லமுறையில் வளரச்

16

இறுதித்தூதர் முஹம்மது ﷺ

❄

பிறப்பு

முஹம்மது ﷺ அவர்களின் தந்தை பெயர் அப்துல்லாஹ். பாட்டனார் அப்துல் முத்தலிப். நபியவர்கள் நபி இஸ்மாயீல் ﷺ அவர்களின் வமிசத்தில் தோன்றினார்கள். மக்காவில் யானைப்படையினர் அழிக்கப்பட்ட சம்பவம் நடைபெற்ற ஆண்டில் ஒரு திங்கள் கிழமையில் பிறந்தார்கள்.

வளர்ப்பு

அவர் பிறந்தவுடன் குடும்பத்தினர் அவருக்குப் பாலூட்டும் பெண்களைத் தேடினார்கள். அக்காலத்தில் செவிலித்தாய்களிடம் பாலூட்டக் கொடுப்பது வழக்கம். ஹலீமா சஅதியா நபியவர் களுக்குப் பாலூட்டினார். பாலூட்டும் காலத்திலேயே சில அற்புதங் களும் அருள்வளங்களும் வெளிப்பட்டன. அபூஉமாமா ﷺ அவர் கள் நபியவர்களிடம்

يَا نَبِيَّ اللَّهِ، مَا كَانَ أَوَّلُ بَدْءِ أَمْرِكَ؟ قَالَ: دَعْوَةُ أَبِي إِبْرَاهِيمَ، وَبُشْرَى عِيسَى، وَرَأَتْ أُمِّي أَنَّهُ يَخْرُجُ مِنْهَا نُورٌ أَضَاءَتْ مِنْهُ قُصُورُ الشَّامِ

‘அல்லாஹ்வின் தூதரே, உங்களின் விசயங்களில் முதலாவதாக வெளிப்பட்டது எது?’ என்று கேட்டார். அதற்கு நபியவர்கள் ‘எனது (வமிசத்தின்) தந்தை இப்றாஹீமுடைய பிரார்த்தனை, ஈஸாவின் நற்செய்தி, எனது தாயாரிடமிருந்து ஓர் ஒளி வெளிப் பட்டு ஷாமின் கோட்டைகள் ஒளிர்வதாக அவர் கண்ட கனவு ஆகியவையே’ என்று கூறினார்கள். (அஹ்மது 22261, ஸஹீஹ் ஜாமிஃ 3451)